TB
0-12x
N25
180463

OFFICE OF THE REGIS...
8 APR 1925

உ

சிவமயம்

வேலுமயிலுந்துணே.

...ங்கதை நீதிச் சங்கீதம்.

பாடசாலைக்கதிுப்பயோகம்

இஃது

திருமங்கலந் தாலூகா கள்ளிக்குடிக் கிராமம்

பிர்மஸ்ரீ K வேலாயுதம் ஆச்சாரியார் அவர்கள் குமாரர்

வித்வான்

V. கந்தசாமி ஆச்சாரியாரால்

இயற்றப்பெற்றது.

இவர் தற்சமயம் கந்தம்என்னும் திருமேவரிசைப்பதியில்

தமிழாசிரியராக வசித்து வருகிறார்

மதுரை மகமதியன் பிரஸில் அச்சிடப்பெற்றது:-1925.

இதன் விலை) Registered Copy-Right. (அணா 2.

109

உ

சிவமயம்

வேலுமயிலுந்துணை.

பழங்கதை நீதிச் சங்கீதம்.

பாடசாலைக்கதியுபயோகம்

இஃது

திருமங்கலந் தாலூகா கள்ளிக்குடிக் கிராமம்

பிர்மஸ்ரீ K. வேலாயுதம் ஆச்சாரியார் அவர்கள் குமாரர்

வித்வான்

V. கந்தசாமி ஆச்சாரியாரால்

இயற்றப்பெற்றது.

இவர் தற்சமயம் நத்தம்என்னும் திருவேரிசைப்பதியில்

தமிழாசிரியராக வசித்து வருகிறார்

மதுரை மகமதியன் பிரஸில் அச்சிடப்பெற்றது:-1925.

இதன் விலை) Registered Copy-Right. (அணு 2.

OFFICE OF THE REGIS[TRAR]
8- APR 1925
MADRAS

சாற்றுக்கவிகள்.

நத்தம் என்னுந் திருவேரிசைப்பதி
ஆசிரியர் சிவபரங்கிரிநாத பிள்ளையவர்கள் மாணாக்
கனம் வ. வீ. வீரியப்பெருமாள் செட்டியாரவர்கள் சொல்லிய
விருத்தம்.

1 திருத்தக்க தேவர் செப்பின் றிரநரி விருத்தஞ்சுட்டுஞ்
சரித்திரம் புணர்த்திநீதிச் சங்கீத நூலைச் செய்தான்
பொருத்தமெய் புவியினோர்க்கும் புகழுமே ரிசையின்மேலாங்
கருத்துள விஸ்வகந்த சாமியாங் கவிஞரேறே

இந்நூலாசிரியர் தமயன் இலக்கண வித்வான்
V. சுந்தரராஜம் ஆச்சாரியாரவர்கள் சொல்லிய
(விருத்தம்)

2 பலகலையுந் தெளிவெனது துணைவன் பன்னூல்
பகர்ந்திடவும் வலியவனே கந்தசாமி
சிலவிதையே பயிலுறாமிச் சிறு நூறன்னைச்
செயப்புகுந்ததது வியப்போ சிலமாணக்கர்
உலகியலின்றி வறிவானுகந்த தென்று
முணர்த்திடுக னின்னதுமனமுகந்தே னிந்நூல்
திலகமென விசைபெறுகச் செகத்திலித்தைத்
தினம்பயினறு நீநிநெறி சிறக்குமாதோ

இந்நூலாசிரியர் தமயன் பிரசங்க வித்வான்
V. பரமசாமி ஆச்சாரியாரவர்கள் சொல்லிய
(வெண்பா)

3 எந்தம்துணைவ னிசைக்கந்த சாமியிவன்
தந்திடுநீ திக்கீதந் தான்வியப்போ—செந்தமிழ்சேர்
வேலா யுதப்பெரியான் மெய்ப்புதல்வன் செய்திடுமே
நாலா விதநூலும் நன்கு.

தற்சிறப்புப்பாயிரம்.

(வெண்பா)

1 ஆக்க லளித்த லழித்த லிவைமூன்றும்
ஆக்க வலனு மவன்றனையே—நோக்க
வருமறையைச் செப்புகின்ற வாறுமுகன் போதந்
தருமவன்றா ளென்றனக்கே சார்பு.

விருத்தம.

2 படியியல் பரதம்வேதம் பயின்றவ ருரைத்த நூன்மேன்
அடியனின் சிறுநூனிற்ற லதிதிகோ வறியான் மேலோன்
நொடியிடி மசகமும்ப ணுண்மணலசனம் பொய் மெய்
கடிகையு முகமுமொன்றாய்க் கண்டெனக் காணுமாறே

(நூற்செய் காரண முதலியன)

3 பெருமையுறு மறிவுயர்ந்தோர் பேசு நூலிற்
பெய்துவைத்த நீதிசில பெரியோய் தேர்ந்து
தருதியிசைப் பாட்டிலெனுக் தகுமாணாக்கர்
தம்மனத்தி னிலைத்திருக்குந் தகுதியாய்ந்து
திருமருவு மரிமருகன் மறையோன் றேவி
செய்யபதந் தமைவணங்கிச் சிலநூலோர்ந்து
ஒருசிறிய நூலியற்று வுகந்தேன் மேலா
யுள்ளகுணங் கொண்டுவக்க வுலகத்தோரே.

பழங்கதை நீதிச்சங்கீதம்.

காப்பு.

வெண்பா.

பாலகணபதியே பாரே ரிசைவாழ்வே
மூலப் பிரணவமே முன்னுரைத்த—சீலப்
பழங்கதைநீ திக்கீதம் பாடுதற்கு வாக்கு
வழங்கியரு ளென்னகத்தே வந்து

திருவேரிசைக் கைலாசநாதர் துதி.

(மதினமோரா எ. வ. மெ)

பல்லவி.

செண்பகவல்லி சமேதா தேவதேவா காவா தேவதேவா

அநுபல்லவி.

தண்டமிழ் தேட சங்கிதம் பாட (செண்)

தொகையறு

அண்டர்புகழ் ஏரிசைப் பதிதனில் வாழவே
அன்புற்ற கைலை நாதா
ஆறுமுகனோடுகண நாதனைத் தந்துமே
அகமகிழ்ந்திட்ட நீதா

முடுகு சரணம்.

அஞ்சலியென்றிட வுந்தமை வேண்டும்
நெஞ்சினில் வந்துமே யெந்தமை யாண்டும்
ஆளும் விஸ்வகந்த சாமி
காளுமுமாமாலை பூண்டும் (செண்) (1)

மாரியம்மன் துதி.

(பகாரியாலா ஏ. வ. மெ)

பல்லவி

என்றனையாள் நீ மாரி யேரிசைத்தாய் நீ

அநுபல்லவி

ஏழையையிவ் வேளை தனில் ஆளவருவாயே
ஈசனுக்கரு மறையுரைத்தவன் தாயே நீயே
எந்திழையே
இந்தவேளையி லென்சிந்தை தெளிந்திடச்
சுந்தரியே யுனை வந்தனை செய்யும் (என்ற)

சரணம்

1 செந்தமிழ் நாட்டில் பாண்டித் தேசத்தினில்
சீர்சிறந்த வேரிசைப் பதிநடுச் சிறந்ததால்
சிந்தைசெய்யுந் தொண்டருக் கருளீந்ததால்
புகழ் சேர்ந்ததால்

சித்தமகிழ்ந்திடு முத்தமர் மேவிடு
நத்தமதிலுறை பத்தினியே (என்ற)

2 பங்குனித் திங்களில் நத்தப் பதியதனில்
பாரினிற் சிறந்ததோர் விழாவயர வேண்டியே
பாங்குள செவ்வாய்க்கிழமை தனிலீண்டியே
தாயுன்பதம் வேண்டியே
பத்திசெய் வித்தகர் சித்தமகிழ்ந்திட
வுத்தமியே யருள் வைத்ததுபோலும் (என்ற)

3 சந்ததமகிழ்ந்து நத்தம் தன்னிலுயர்ந்து
தங்கமேவுஞ் சிங்கமாவுந் துங்கவன்னந் தம்மிலூர்
தாயே விஸ்வகந்தசாமி தன்னைவந்துகார்
திருக்கண் ணுகந்துபார்
சங்கத்தமிழுடன் றங்கப் பொருளுறு
மிங்கிதவேரிசை யங்குள வாழ்வாய் (என்ற)

(2)

தாருகாவனத்து ரிஷிகள் கர்வபங்கம்.

(அடங்கதுஞ் செக எ. வ. மெ)

1 சிறந்தசெல்வங் தமிழு நிறைந்து
அறம்புரிந்து மகிழ்பவர் வந்து
சீலமாம் ஏரிசை வந்தாய்—கைலாசநாதா
வேலனும் பாலனைத் தந்தாய்
சீரறு தாருகர் பாரிய ரோடியர்
வீரியர் தாமெனக்கூறு மகந்தைகொள்
செய்திதனைத் தெரிந்தவா—அவர் செருக்கை
கொய்ய மனந் துணிந்தவா

2 திகழ்ந்த கீழுங் கோவணமும்புலி
புகழ்ந்த வோடும் பாவ மகற்றிடு
திருநீறும் பூசி நின்றவா—ரிஷிகள் மனைக்
கருகே பிக்ஷைக்குச் சென்றவா
தேடியே மாதர்கள் ஓடியே பிக்ஷைகள்
போடுவராமெனக் கூடுகை நாடிடச்
சென்றே சிரித்திருந்தவா—தாருகர்சி
மன்றேயுறப் புரிந்தவா

3 மகம்புரிந்து மாதவ ரானவர்
மனந்துணிந்து மேவிய தாகிய
மானைக்கரம் பிடித்தவா—பிளிறிவரு
யானைத்தோலி யுரித்தவா
வாதுடனேயினு மேவுமுடுக்கையும்
மோதுமழுப்படை யோடு விடத்தையும்
வாங்கியணிந்து நின்றவா—மதியிதழி
தாங்கிப் புனைந்து கொண்டவா

4 மகிழ்ந்துகண்டு வடியவர்நித்தம்
புகழ்ந்துகொண்ட திருமணிமுத்தா
மாநதிப் பக்கமுற்றவா—சிரசினிலும்
வானதி நிற்கப் பெற்றவா
மாரிசிறந்திடு மேரிசைவந்துள
சீரியனேயுனை நேரிலறிந்திட
வந்துவரங்கள் தருவாய்—விஸ்வகுலத்துக்
கந்தசாமிக்கு மகிழ்வாய்

(3)

எல்லாந் தெய்வச் செயல்.

(ஷ டி வ. மெல் சிறிது வேறு)

1 எனதது நானெனு மமதைகள் தீருக
இகபர வீடருள் கடவுளை நாடுக
எல்லாந் தெய்வச் செயலாகும்—புவியவர்க்கு
எல்லாந் தெய்வச் செயலாகும்

2 இணையிரு புறவொரு பணைமர மதிலுற
கணைகொடு வலைகளைத் துணிசெயும் நினைவொடு
வெய்யத் துணிந்த னன்வேடன்—அம்புடன் வில்லைக்
கையிற்பிடித்த னன்மூடன்

3 இங்கிவ னிம்முறை நின்றிட வங்கொரு
வெங்கொடு வைரியு மங்கிரை தனையெணி
யிந்தப் புறாக்களைக் கொல்ல—பறந்துகொண்டு
வந்தர மீதினுஞ் செல்ல

4 இவரிரு வோருயிர் கவருவர் நாயினித்
தவறுவ தோவரி தரிதென மாழ்கியு
மிருதலைக் கொள்ளி யெறும்பாய்—புருக்களீசன்
கிருபையை யுள்ள விரைவாய்

5 இக்கொடு வேடுவன் அக்கடு வாளியை
யக்கணை மேவிட நற்குறிநாடி
யிழுத்துப் பிடித்து நின்றிட்டான்—ஈசனுமவனை
கொழுத்த செயலைக் கண்டிட்டான்

6 இது தகி யரவது குதியினில் மிகுவிரை
வதனொடு கடியிடப் பதறினன் விடுகணை
யேகிக் குறி தவழ்ந்ததே—ராஜாளியுடல்
யாகித்துக் கீழ் விழுந்ததே

7 எண்ண மிழந்தவர் மண்ணில் விழுந்திட
வண்ணல் புரிந்திடு தண்ணளி தன்னொடு
மின்பம் புருக்கள் பெற்றன—கடவுளிடத்
தன்பும் நிறைத லுற்றன

8 இச்செயலானது தற்செயலாலல
அச்சிவனுலென னிச்சய மேதின
மிந்தக்கருத்தை மகிழ்ந்தோம்—விஸ்வகுலத்துக்
கந்தசாமியைப் புகழ்ந்தோம் (4)

பொருள் வைத்திழத்தல்

(மாத்தாடப்பா எ. வ. மெ)

பல்லவி

இந்தப்புவியிலுள்ளோரே தனம்படைத்து (இந்த)

அநுபல்லவி

சந்ததமுங் கொடுத்துத் தாமுமகிழ்ந் துண்பீரே (இந்த)

சரணம்

1 முந்தைப்புற்றினி னின்றுமூர்க்க முடனேசென்று
வந்தகரிலைய யன்று வாளிதொடுத்து நின்று
வருகரி பிளிறு தரப்பதறி யெழு
மரவவ னடியி லுறக்கடி யிடவும்

வாளதா லறவாவி கோறிய
நாளதோர் நரிமாழு மாறுறும் (இந்த)

2 வந்தநரிகரியும் மாணிடனு மரவும்
சிந்தை மகிழ்ந்துமறு திங்கள்நாளெழு மொன்றுந்
தினத்த குந்தவெண ணிணைத்து மவன்விலி
விணைத்திடுநரம்ப தணைக்கடித்திடவுந்
தீதுநரியுற வீது பொழுவில்
மோதிமிடறுறு மோது மொருகதை (இந்த)

3 அந்தநரி யின்செயலார்வமுடன் புவியில்
சிந்தையுறக் கவியிற் செய்திருத் தக்கதேவர்
சிறப்பை நமர்மன முறப்புகன்றதிது
அறப்பொருளையினித் திரத்துடன் பயில்க
சிந்தைசாதனம் வந்திந்நாள் விஸ்வ
கந்தசாமி புகழ்ந்து வோதினன் (இந்த)

(5)

(பேராசை)

(தஸ்குமாரே எ. வ. மெ)

பல்லவி

கேளும்—பூலோகமீதிற் சிவ புண்ணியந் தேடும்

அநுபல்லவி

புண்ணியந்தேடும் வெகு கண்ணியம் நாடும்

சரணம்

1 தார்மீகனு மொருவன் சயினுலயம் புரிந்தான்
சீர்மைப் படித்தரங்கள் செய்யுமுன மிறந்தான்
தேவனுமானான் கோவி
லாவனுபானான் பொனின்
சிறகைபருவி பயிலாய்க் கோவிலில்
இறகிரண்டெனத் தினமும் நல்கினன் (பூலோ)

2 நாடியவை யெடுத்தான் நாளுங்கவுந் தனென்பான்
தேடிப் பூசைமுடித்தான் சித்தம்பே ராசையுற்ருன்
சீக்கிரந்தனிலே மயிற்
ரேக்கை பற்றிடலே கசை
சிறந்துபிடிக்க வெழுந்து காக்கையாய்ப்
பறந்து சென்றது விழுந் திறந்தனன் (பூலோ)

3 பேராசையே பிடித்தார் பேயர்தம் மைக்கெடுத்தார்
ஆராய்ந்ததை விடுத்தார் ஆநந்தமே தொடுத்தார்
அறந்தனைத் தேடும் புவி
பிறந்ததை நாடும் இது
அந்தரங்கம் விஸ்வகந்தசாமி சொன்னேன்
செந்தமிழ் சேர்ந்திடு முந்தைப் பழங்கதை (பூலோ)

(6)

பொருட்டேடுஞ் சூழ்ச்சி கேடுந்தரும்

(பாலாபிஷேகப் எ. வ. மெ.)

பல்லவி

பூமீதினிற்பிற பொருள் கவர்சூழ்ச்சியிற்
புத்திமழுங்கிடுஞ் சத்தியமே

அநுபல்லவி

நாமீதுகந்து முரைக்கு மொருகதை
நத்தித் தெளிந்திடு நித்தியமே

தொகையரு

பாதைமீ தோர்குடர் விடக்காவ லாகநரி
பார்த்துண்டு வருபடைகளால்
ஓதையா மமருண்டு விளிதென்ன மனமகிழ்ந்
துண்டதை நிறுத்தி விரகால்

(முடுகு சரணம்)

படிமிசை யதுவிறந் ததுவென வோர
சடிதியில் விழுந்தது பிணவுண வார
சார்ந்தபடைக்கமர் நேர்ந்திலையாலவர்
சந்தச்செவி வால் தோல்
வந்துடன் கொண்டனர் (பூமிதி)

(தொகையறு)

ஆதலாற் றமுடைய தனுபவித் துப்பிரிதை
யாசைகொள் ளாதிருப்பீர்
அனுதினங் குருலிங்க சங்கமர்க் கன்பதா
யார்ந்தநெறியே பிடிப்பீர்

(முடுகு சரணம்)

அகமது குகனடி தகவுட னொடி-
மகமனை சுகமொடு மிகுபுகழ் பாடி
ஆன்றசிறப்புடன் றோன்றுங் கந்தசாமி
சான்றோர் தருங்கதை
தோன்றச் சொன்னேன் பூமி (பூமிதி) (7)

திரிகரண சுத்தத் தருமம் தேவரும் வியப்பர்.

(கலிலோ எ. வ. மெ.)

பல்லவி

தினமே யிய லறமது புரிபவன்
றிருவரு ளுடையவனே—பெரியவனே (தின)

அநுபல்லவி

முனமே சேடகன்மகள் சந்தனை
முறையற மது தெரிவீர்—அறம்புரிவீர் (தினமே)

சரணம்

1 ஆறில்லவள் செலவெடுத் தொருவித்
தியாதர ணகலுவனே
பாரியாளுமே துணியுறு வாளெனப்
பார்விடுத் தயருவனே
சீர்சேரவள் தனையெடுத் தவன்றரத்
திருமங்களனவுகர்தான்—திருவசேனன் (தினமே)

2 சுதையாமென வளர்பொழு தவன்மனை
சுபரயை யென்பவளே
இதையுஞ் சூதெனச் சரகர விலங்கிட்
டிம்சைகள் செய்தனளே
பதையேசந் தனையுறப் பகவனும்
பணிமொழி முனம் வரவே—துதிசெயவே (தினமே)

3 ஆதாரம்நீ யென வவ டுதிசெய
வவிழ்ந்தன பிணியனவே
யீதாமுண வென வுதவினளொருறு
மியல்வர காமுணவே
போதாம்பொனு மியவசந் தமும்புகழ்
பொருந்தினர் புலவர்விஸ்வ—கந்தசாமிசொல் (தின) 8

(மோசந்தனக்கு நாசம்)

(மயிலேயுன் சாயல் எ. வ. மெ)

பல்லவி

மனதில்மோ சம்நினைப்பர் மாண்டும் நரகுதிப்பர்

அநுபல்லவி

சினமு மாசைவிடுப்பர் சிறந்த பதமடுப்பர்

சரணம்

1 முனமோர் காகுத்தமகன் மூடனவன் வணிகன்
மூர்க்கன் றனியோர் பெண்டான் மார்க்கம் வருதல்கண்டான்

தொகையரு

முழுவலியினு லவளை யழுகையுற வேகினுரின்
முன்றள்ளி நகை கண்டனன்
மோசமா யதுகவர வீழவே யவடழுவ
மூர்க்கனு முயிர் விண்டனன்

சரணத்தொடர்

முதியரிசைத்த துள்ளும் முன்மோச மாசைதள்ளும்
முந்தைக் கதைதேர்விஸ்வ கந்தசாமிசொல் லுள்ளும்(மு) 9

அடைக்கலப் பொருள்

(எப்படி மனந்துணிந் த, வ, மெ)

பல்லவி

அடைக்கலப் பொருடனைக்க வராதீர்
அயலவர் பொருண்மிசை
ஆசைநாசம் மோசம் போகாதீர்—அறந்தினம் புரிகுவீர்

அநுபல்லவி

கிடைத்த ரத்தினம் பத்திரமித்திரன்
கேள்விமந்திரி சத்திய கோஷனின்
இடத்து வைத்தவ னடுத்து வினவ
வேதென வாதெனப் பாதக னோதினன் (அடை)

சரணம்

1 திடத்தபத்திரன் றெருக்க டோறுந்
தீயமந்திரி செயலைக் கூறு
மிடத் தாசனுஞ் சிம்மசேன
னீதுதீது பூதி யோதெனும் (அடை)

2 அரசன்கேட்கச் சத்திய கோஷனை
யாரோவொருவ னிழந்த பித்தனை
திரத்தினுன்னலை யென்றவன் சத்தியஞ்
செய்குவனையையோ வையகம் பொய்யிது (அடை)

3 மனத்தி னொன்றையே மதித்த பத்திரன்
வாய்மை யாமெனன் றரசன் பத்தினி
சினத்து மந்திரி மோதிரஞ் சூதினால்
தேடியே சேடியே யோடியே நாடெனும் (அடை)

4 பத்திரமித்திரான் ரத்தினங் தந்தருள்
பாருமுத்திரி படித்தி யென்றனள்
சத்திய கோஷனின் பொக்கிஷ தார்தர
சார்ந்தன ளோர்ந்தனள் காந்தனைச் சேர்ந்தனள் (அடை)

5 அத்தின மிறைவன் வாங்கி மகிழ்ந்து
வார்ந்த ரத்தினங் பலவுங் கலந்து
பத்திரன் றன்னையும் வரவும் புரிந்து
பாரிது யாரிது தேரிது கூறெனும் (அடை)

6 பத்திரன் றன்னது பகிர மன்னவன்
பாவிகோஷனை யுயிர் கவர்ந்தனன்
சித்தந்தெளி விஸ்வ கந்தசாமி கவி
தேடுக பாடுக நாடுக வீடுமே (அடை) 10

வியாபாரத்தி லுண்மை வேண்டும்.

(தஸ்குமாரே எ. வ. மெ.)

பல்லவி

வியாபா ரஞ்செய்க வதனறமே தெரிந்துகண்டு (வியா)

அநுபல்லவி

அறமே தெரிந்துகண்டு பிறவுந் தமபோற்கொண்டு (வியா)

சரணம்

1 பூபாலக னுழுதான் பொன்னின் கலமெடுத்தான்
சார்பாம் விலையறியான் றங்கமெனத் தெரியான்
றுன் விற்க வெடுத்தான் ஒரு
வாணிக னெடுத்தான் விலை
தருகமிளகு வொருபடி யென
வறிவணிகனும் விர குரைத்தனன் (வியா)

2 ஆழாக்கு மிளகென்று னல்ல துரிகொள் ளென்றான்
நாழி யிதற்கென் னென்றான் நல்லவ னுமகன்றான்
நணிதெருச் சென்றான் வேறு
வணிகனும் நின்றான் அவன்
நாழி கொடுத்ததை மீளக் கவர்ந்துடன்
பூழிவி ளக்குவன் ஆழ்கிணம் வீழ்த்தினன் (வியா)

3 முந்தை வணிகனுந்தான் முந்தாமை யைநினைந்தான்
சிந்தை யதுகரைந்தான் றேடித் தேடி யலைந்தான்
தெளிந்தில னைந்தான் பொரு
ளிழந்தவன் வந்தான் இவர்
சிந்தைம யங்கிப்புகுந்து தெருத்தொறுஞ்
சந்ததம் பேசிய விந்தையைக் கேளுங்கள் (வியா)

4 அம்மிளகு தந்தாலோ வத்தைக் கழுவாக்காலோ
விம்முறை யாகவல்லோ விபமூடர் மாழ்வுமல்லோ
இந்தக்கதை தெரிந்தேன் விஸ்வ
கந்தசாமி பகர்ந்தேன் தின
மியமஞ் சமமுந் தமம்விட லனு
புவமுடன்சமா தானஞ் சிரத்தையாய் (வியா) 11

கொலைபுரிவார் கொலையுறுவார்

(நம்பினே னுன்னை எ. வ. மெ)

பல்லவி

ஜீவஹிம்சை செயேல்—ஜெக
தீசனாணை யோஜனைவிடேல் (ஜீவ)

அநுபல்லவி

பாவமோரா தவந்தி நாடன்
பாரிசந்த்ர மதியங் நாடன்
ஆவலா மகன சோதரன்
ஆண்டு வேண்ட லீண்டு கண்டிடும் (ஜீவ)

சரணம்

1 மாவதாலு மோர்கோழி வகுந்தனர்
மாரிக்கேபலி யரிந் துகந்தனர்
சேவை யாயுஞ் சேயுஞ் செய்தனர்
தீமைக் கொலைக டாமு மெய்தினர் (ஜீவ)
2 பேதையரிழி பிறவி பெற்றனர்
பிறவிதோறுங் கொலையு முற்றனர்
காதையீது வோதிடும் விஸ்வ
கந்தசாமி சிந்தை போலினி (ஜீவ) 12

பொய்வேடந் துன்பந்தரும்

(கண்ணாயிரம் படைத்த எ. வ. மெ)

1 பூமீதினிற்றவத்தின் மாவேட முற்றிருந்தும்
புத்தியடக்கிடு சத்தியு மின்றெனிற் போதுமோ—மகிழ்
நித்தியமுற்றுள சத்துமெடுத்ததை யோதுமோ

2 நாமீ திசைக்கவொரு பாமீ துரைத்தகதை
நலமறு வேடர்கள் பயமுற வேயினி காட்டுவோம்—இனும்
மலமறுஞானிகள் பலனுறுவார்சில காட்டுவோம்

3 முன்னே பகலூரியிற் கொன்னே யிருந் தொருவன்
முயலுவனி ருளயலவர் பொருள்கவர்தொழில்முற்றுமே-மிகு
நயவுள புனிதனும் வணிகனு மெனநக ருற்றுமே

4 பன்னாளி தையறிய மன்னன் முயன்றபடி
பன்முறை செய்தொரு பொழுத வனைக்காம் பற்றினு-ருடன்
னிலமது பெய்தொரு கரிகொ டவன்றலை யெற்றினர்

5 பொய்யோ வேடமெடுத்து மையோ வவன்மடிந்தும்
புத்தி னிடைத்துயர் மெத்த வடுத்திடப் போகுமே-மனஞ்
சித்த மடக்குவன் முத்தியடிப்பவ னுகுமே

6 மெய்யோட சித்துணர்வும் வையோ டும்பர்வெறுப்பும்
மிருபா கதிபெறு நசையது வாரோடு மேவுவார்—தினம்
ஆகமது பரமென விசைகுவர் சமகதி யாகுவார்

7 கோமாபலி ஜெனகன் பாகீரதனும் வேடங்
கொள்விலை சித்திக டழுவலை முத்தியுங் கூடினூர்—தம
துளமறி யத்வித கைவல் யத்தினும் பாடினூர்

8 நாமா யவைதெளிய லாமா மாயினுங்குரு
நயவுரை முந்தைய பழநுகசிந்தை நாடியே—குகன்
றயவுரை வந்திவை யெழுதுதல்கந்த சாமியே (13)

மனோராஜ்யம் மயக்கந்தரும்.

(பாண்டிய னின்றமீனுக்ஷி எ. வ. மெ)

பல்லவி

ஜாக்கிர சொப்பன வாக்கம்—உளபொருள்
சகலமும் போக்கும் (ஜாக்)

அநுபல்லவி

நோக்குக வோர்கதைப் போக்கும்—பழங்கதை
நுமக்கறி வாக்கும் (ஜாக்)

தொகையறு

தரணியிலோ ரொருவன்முன் றூடியொடு பாடிபோய்ச்
சந்ததம் மோரிரந்தான்
திரமுடன்றூடி தோய்த் தேகொண்ட வெண்ணெயது
திரட்டியொரு சேர்தெரிந்தான்

(பல்லவித் தொடர்)

காய்ச்சித்தன் முன்வைத்துக் கண்டான்—மனத்து
ராஜ்ஜியங் கொண்டான்

தொகையறு

நாயிந்த நெய்விற்கின் யாபார முதலாகும்
நாளடைவிலே பெருகு மேல்
ஆயிந்த வளமறிந் தேயரசு பெண்டரும்
ஆமவள் சொற்றவறு மேல்

பல்லவித் தொடர்

அதைக்குறித்து வளையும் நானே—மதிப்பேனென்
றிதைமிதித் தானே (ஜாக்)

தொகையறு

இதைமிதித் ததறவே யதுவதரின் மறையவே
யேங்கி மனமே கொதித்தான்
புதைபதைத் தளறியுயி ரதைவிடுத் தையகோ
பாவியும் நரகுதித்தான்

(பல்லவித் தொடர்)

பகர்ந்ததை யுணர்ந்து தேருக—கந்தசாமி
புகன்றதிதை யோர்க (ஜாக்) 14

உலோபம்

(தாதாபாய் நௌரோஜி எ. வ. மெ)

பல்லவி

உலோபாதீ ரோர்போதும் உலோபாதீர்

அநுபல்லவி

உண்மைவேதேடி மண்ணுறு பேழுடி (உலோ)

சரணம்

மாவா யிலவழுள்ளே மகிழ்ந்துமி டித்தழுள்ளே
வாய்புளித்திடு காடியி னோடுமே
லாயுண்டுபொருள் மூடனுந் தேடுமே (உலோ)

தொகையறா

ஓயாம லிவ்வாறு மாவைபே யுண்டுபொரு
ளுடைமையுள வணிக னொருவன்
மாயாமனுய்வனோ மாய்பொழுதி லெண்ணியகி
வடிவினை கார்த்து வருவன்

சரணம்

வந்துமே துன்பமுற்றான் வாழ்விலு மின்பமற்றான்
மாமகிழ்விஸ்வ கந்தசாமியிசை
தாமகிழ்வுடன் சந்ததம் பூமிசை (உலோ) 15

(துறவுக்கு விராகமே துணை)

(தம்மைமெய்ய புகழ்ந்திச்சை எ. வ. மெ)

1 ஸ்ரீ தத்தனனவ னுஞ்சினிநகர் தாங்குநாளவன் பாங்கிலாம்
பத்தினியசோ பத்திரைதரு பாலனுஞ் சுகுமாரனும்
2 உத்தமனவன் வளருநாளையில் உளந்தெளிந்திட விளைந்துமே
யத்தனனவன் றுறவுபூண்டிட வாயுமே துயர் மேவுமே

3 சேயுந்தாயுமா வேகியோர்முனி திருவடிதொழ வனையவன்
றாயவாசிகள் கூறியுன்மகன் றுறக்குமே யென வுரைக்குமே
4 தாய்வருந்தியுஞ் சேய்தனக்குச்சம் சாரதுக்கமே சார்ந்திடா
தேயிருக்கப் பொருள் பலவுடனெட்டு நால்மணந்தொட்டனள்
5 தேவியாரொடு வாழுநாளவன் சேர்ந்தபக்குவ மோர்ந்தொரு
தேவமாமுனி வந்தயனுறு சினவரன்றன்ப வனமதில்
6 தேவமானிட நரகலோகத்தின் செய்தியாவரு முய்யவே
கூவியல்லினிற் பத்மகுல்மத்தின் குணமுரைத்திடு கணமதே
7 இச்சுகுமார னச்சணத்தி லிடைவிராகம தடையுமே
உச்சமாம்பதம் நச்சுமே கோவி லுற்றுமே பலகற்றுமே
8 இச்செகத்தில் விராகமன்றிவே றேதுமோ விலையாலது
நிச்சயித்துத் துறப்பரே சுகம் நேருவார் சமஞ் சேருவார் (16)

(வாழி விருத்தம்)

உலகமேன்ன குணத்தோன் வேத முயர்மறை மேலோர் நூற்கள்
மலமறுபுலவர் வேந்து மாணவர் மாதர் கற்புந்
தலமதில் விஸ்வகர்ந்த சாமியும் வாழ்க நீதி
யிலதமிந் நூலென் றென்று மினிதேன வாழ்க மாதோ

(முற்றும்)

1804

முந்துங்கள்! நீதி விஷயம்!! முந்துங்கள்!!!

பழங்கதை நீதிச்சங்கீதம்.

இப்புத்தகம் நத்தம் அ. அ சி. வ. இரும்புக் கடையிலும், நேரிலும், பெற்றுக்கொள்ளலாம். சொற்ப காப்பிகளேயுள்ளன முந்துங்கள்!

வித்வான்

V. சுந்தசாமி ஆச்சாரியார்,

நத்தம்